செ.வெ.எண்: 109 / ஜீன் / 2021 நாள்:29.06.2021

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் இலங்கை அகதிகள் முகாமில் அல்லாமல் வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பத்திற்கு கொரோனா கால சிறப்பு நிவாரண நிதியாக தலா ரூ.4,000 ரொக்கத்தினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் இன்று (29.06.2021) வழங்கினர்.**

-------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இலங்கை அகதிகள் முகாம் அல்லாமல் வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பத்திற்கு கொரோனா கால சிறப்பு நிவாரண நிதியாக தலா ரூ.4,000 ரொக்கத்தினை வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.திருச்சி என்.சிவா அவர்கள், அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகத்தின் இயக்குநர் திருமதி.ஜெசிந்தா லாசரஸ் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் இன்று (29.06.2021) நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் கொரோனா கால சிறப்பு நிவாரண நிதியாக முகாமிற்கு வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர் குடும்பத்திற்கு தலா ரூ.4,000 ரொக்கத்தினை வழங்கினார்கள்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ந.தியாகராஜன், திரு.செ.ஸ்டாலின் குமார், திரு.எம்.பழனியாண்டி, திரு.எஸ்.இனிகோ இருதயராஜ், திரு.பி.அப்துல்சமது, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பழனிகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.என்.சேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செல்வி ச.ஜெயப்பிரித்தா, தனித்துணை ஆட்சியர் (அகதிகள் முகாம்) திருமதி ஜமுனா ராணி ஆகியோர் உட்பட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப தமிழகம் முழுவதும் இலங்கை வாழ் தமிழர்களுடைய 108 முகாம்களில் சுமார் 38,000க்கு மேல் அங்கு வாழ்பவர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக நாங்கள் ஒவ்வொரு முகாமாக ஆய்வு செய்து

கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள வாழவந்தான் கோட்டை, கொட்டப்பட்டு முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்ததில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் தமிழக அரசு கவனத்திற்கு எடுத்துச் சென்று அதை நிறைவேற்றித் தருவதற்காக ஆய்வு நடைபெற்று வருகிறது. இதில் தமிழக அரசின் சார்பாக முகாமில் வசிப்பவர்களுக்கு கொரோனா நிதியாக குடும்பத்திற்கு தலா ரூ.4,000ம் முதற்கட்டமாக வழங்கப்பட்டது. இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமிற்கு வெளியே வசிக்கும் 13,553 குடும்பங்களுக்கு 5 கோடியே 42 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் இன்றைக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அந்தப்பணி துவங்கப்பட்டது. அதே நேரத்தில் இவர்களுடைய குடியுரிமை, கல்வி மேம்பாடு உள்ளிட்ட பிரச்சனைகளையெல்லாம் தமிழக அரசு நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து சென்று தீர்வு காணப்படும் என்று பேசினார்.

முன்னதாக, வாழவந்தான் கோட்டை மற்றும் கொட்டப்பட்டு இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் வசிக்கும் மக்களிடம் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் அவர்கள் ஆகியோர் மனுக்களைப் பெற்று குறைகளை கேட்டறிந்து அவர்களிடம் விரைவில் இக்குறைகளுக்கான தீர்வுகள் காணப்படும் என்றும், கல்வி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படும் என்றும் தெரிவித்தனர். வாழவந்தான் கோட்டையில் குடிநீர்த் தொட்டி அமைத்திடவும், அங்கன்வாடி மையம் கட்டிடவும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் முகாமில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்காக கல்வி, குடிநீர் உள்ளிட்ட தேவைகள் அனைத்தும் நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பேசும்போது, இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைக்கு விரைவில் அரசின் மூலம் தீர்வு காணப்படும் எனவும், அவர்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு உறுதுணையாக இருக்கும் எனவும் தெரிவித்தார். கொட்டப்பட்டு முகாமில் கழிவறை வசதி ஏற்படுத்திட எதிர்வரும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பின்னர், திருவெறும்பூரில் உள்ள முக்குலத்தோர் மேல்நிலைப்பள்ளியில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தும் சிறப்பு மருத்துவ முகாமை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**வெளியீடு:**

உதவி இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.